DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 14

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெயராஜன் |
| Father's Name | : | சத்திய நேசன் |
| Village | : | வற்த்தான்விளை |
| Taluk | : | கல்குளம் |
| Caste | : | நாடார் |
| Calling | : | - |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 51 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>13.06.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது வடசேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 28.08.2023 அன்று 21.30 மணியளவில் நிலைய பொறுப்பில் இருக்கும்போது வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனையில் இருந்து போன் மூலம் கிடைத்த Initmation பெற்று Initmation படி வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனை கிருஷ்ணன்கோவில் கைலாஷ் கார்டனை சேர்ந்த குமார் மகன் மனோஜ் வயது 22 என்பவர் 20.45 மணிக்கு உடலில் பலத்த காயத்துடன் மருத்துவமனையில்

அனுமதிக்கப்பட்டு 20.50 மணிக்கு இறந்து விட்டார் என கிடைத்த தகவலின் பேரில் நான் மருத்துவமனைக்கு 21.40 மணிக்கு மருத்துவமனை Initmation பெற்று அங்கு மருத்துவமனையில் இருந்த நபர்களை விசாரிக்கும்போது மருத்துவமனையில் இறந்து போன நபரின் அண்ணன் ராஜகோபால் வயது 28, வடசேரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றதாக தகவல் தெரிந்து நான் 21.55 மணிக்கு மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு நிலையம் வந்து 22.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜகோபால் எழுத்து மூலமாக புகார் மனுவை பெற்று, வடசேரி காவல் நிலைய குற்ற எண். 120/2023 பிரிவு 294(b), 324, 302 இ.த.சா ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனுவின் அசல், Death Initmation ஆகியவற்றை துரித தபால்மூலம் நாகர்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் 2 க்கு அனுப்ப வேண்டி Grade 1 PC 2740 சதீஷ் என்பவரிடம் தபாலை 22.45 மணிக்கு ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை. அது அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 1 ராஜகோபால் கொடுத்த புகார் மனு ஆகும். நான் சத்தியம் மருத்துவமனையிலிருந்து பெற்ற Initmation என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான். அது அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

அ.சா.ஆ. 12 ல் போலீஸ் Intimation ல் நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றதாகவோ, எத்தனை மணிக்கு Intimation நான் பெற்றதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனை செல்லும்போது மருத்துவமனையில் யார் யார் இருந்தார்கள் என போலீசார் என்னை விசாரிக்கும்போது சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். யார் யார் இருந்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. ராஜகோபால் என்பவர் மருத்துவமனைக்கு சென்றிருந்தார் என்பது யார்

மூலம் தெரிந்தது என்றால் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனையில் இருந்து யாரிடமும் இருந்து புகார் மனு வாங்க முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவரின் அண்ணன் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டதாக சொன்னார்கள் அதனால் வாங்கவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் மருத்துவமனையில் யாரும் இல்லை என்றாலும் ராஜகோபால் காவல் நிலையத்திற்கு சென்றதாக யாரும் என்னிடம் சொன்னதில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் அவ்வாறு எந்த நபரும் அங்கு இருந்திருந்தால் அவரிடம் புகார் மனு வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் சாட்சி அரவிந்த், சம்பவத்தை பார்த்ததாகவோ, சம்பவ இடத்திற்கு வந்ததாகவோ, சம்பவத்தை தடுத்ததாகவோ, சத்தம் போட்டதாகவோ இல்லை என்றால் சரிதான். சாட்சி சண்முககிருஷ்ணன் என்ற கிஷோர் எப்பொழுது, எந்த திசையில் இருந்து யாருடன் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வந்தார் என அந்த ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவிலும், FIR லும் காயம் பட்ட நபரை எந்த வண்டியில், எந்த நபர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். புகார் மனுவிலும், FIR லும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எந்த தடயமும், பொருட்களும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனை சென்ற போது காவல் நிலையத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் 2 பேர் இருந்தார்கள். நிலைய பாரா காவலும், இரவு ரோந்து அதிகாரியும் இருந்தார்கள். காவல் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் தகவல் தெரிந்தவுடன் 21.30 மணிக்கு வந்தார்கள். காவல் நிலையத்திற்கு சம்பவம் குறித்து தகவல் கிடைத்த நேரம் 22.00 மணி என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் குறித்து எந்த தகவலும் கிடைக்க வில்லை என்றாலும் அதனால்தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல் நிலையத்திலிருந்து ஒரு 100 மீட்டர் தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து சத்தியம் மருத்துவமனைக்கு காவல் நிலையம் முன்பு உள்ள ரோடு வழியாக செல்லலாம் என்றால் சரிதான். அதுதான் குறுகிய வழி என்றால் சரியல்ல. பள்ளிவிளை ரயில்வே ஸ்டேசன் ரோடு வழியாக செல்வதுதான் குறுகிய வழி. புகார் மனுவிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ எந்த வழியாக சத்தியம் மருத்துவமனைக்கு மனோஜ் ஐ எடுத்து சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 2 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலைய வளாகத்தில் அதிகாரிகள் வண்டியும், எங்களது வண்டிகளும், நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் எப்போதும் இருக்கும் என்றால் சரியல்ல. வெளியே சென்றிருந்தால் இருக்காது. எப்போதும் வண்டிகள் இருக்கும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த உடன் ராஜகோபால் ஏன் 2 நிமிட தொலைவில் உள்ள காவல்நிலையம் வந்து சம்பவம் பற்றி சொல்லவில்லை என ராஜகோபாலிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. சம்பவம் நடந்த அன்று ராஜகோபால் உடைகளில் ரத்தம் படிந்திருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு பார்த்த விவரத்தை காவல் ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர் மீது எந்த ரத்தமும் படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலையம் அருகில் 24 மணி நேரமும் டேக்சி மற்றும் ஆட்டோ ஸ்டாண்ட்டில் ஆட்டோக்களும், டேக்சிக்களும் இருக்கும் என்றால் ஆட்டோ மட்டும் இருக்கும் டேக்சி ஸ்டாண்ட் கிடையாது. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் மனு எதுவும் நான் பெறவில்லை என்றாலும் நீதிமன்றத்திற்கு நான் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார் மனு எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்ற

விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராஜகோபால் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். புகார் மனு எதிரி மீது ஜோடிக்கப்பட்டது என்றாலும் புகார் மனுவுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.